செ.வெ.எண்: 261 நாள்:20-04-2018

அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழா அன்று (27-04-2018) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளுர் விடுமுறை மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு.

## பத்திரிக்கைச் செய்தி

அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா 27.04.2018 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறுவதை முன்னிட்டு அன்றையதினம் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் (தேர்வுகளுக்கு இடையூறு இல்லாமல்) உள்ளூர் விடுமுறை (Local Holiday) நாளாகவும், அவ்விடுமுறையை ஈடுசெய்யும்வகையில் 12.05.2018 இரண்டாம் சனிக்கிழமையை பணிநாளாகவும் அரசு உத்தரவின்பேரில் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி உள்ளூர் விடுமுறையானது செலாவணி முறிச்சட்டம் 1881 (under Negotiable Instruments Act 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலைக்கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படவேண்டும் எனவும், கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளில் நடைபெறும் முக்கிய தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில் இருக்க வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி இ.அ.ஆ,. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி